DEPOSITION OF WITNESS

**In the Court of III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No. 303/2023**
**Present – B.Saravanan, B.Sc.B.L,**
**III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

Prosecution witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கனிஷ்கா | Caste | : | |
| Father Name | : | பொன்னன் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | 16 years |

*சாட்சி குழந்தை சாட்சி என்பதால் அவரது புரிந்துகொள்ளும் திறன் தொடர்பாக அறிந்து கொள்வதற்கு பின்வருமாறு நீதிமன்றத்தால் கேள்விகள் கேட்கப்பட்டு பதில் பதிவு செய்யப்பட்டது.*

*கேள்வி 1 – உங்கள் பெயர் என்ன?*

பதில் – கனிஷ்கா

கேள்வி 2 – உங்களது தாயார் பெயர் என்ன

பதில் – ரேகா

கேள்வி 3 – உனது தந்தை பெயர் என்ன?

பதில் – பொன்னன்

கேள்வி 4 – உங்களது சொந்த ஊர் என்ன?

பதில் – கடலூர் மாவட்டம்.

கேள்வி 5 – தற்பொழுது எங்கு, எந்த வகுப்பில் படித்து வருகிறீர்கள்?

பதில் – நான் தற்போது கடலூரில், ஸ்ரீவரதாம்மாள் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் 11ம் வகுப்பு உயிரி கணிதவியல் படிக்கிறேன்.

கேள்வி 6 – இன்று நீங்கள் எந்த ஊரில், எந்த இடத்தில் இருக்கிறீர்கள் என்று தெரியுமா?

பதில் – தெரியும். திருச்சியில் நீதிமன்றத்தில் இருக்கிறேன்.

கேள்வி 7 – இன்று நீதிமன்றத்தில் கருப்பு ஆடை அணிந்துள்ளவர்கள் யார்?

பதில் – அவர்கள் வக்கீல்கள்.

கேள்வி 8 – எனக்கு உண்மைக்கும், பொய்க்கும் வித்தியாசம் தெரியுமா?

பதில் – தெரியும், உண்மை என்றால் பார்த்ததை சொல்வது, பொய் என்றால் பார்க்காததை பார்த்தது போல் சொல்வது.

மேற்படி இளவர் / குழந்தை சாட்சியிடம் நீதிமன்றத்தால் மேற்படி கேள்விகள் கேட்கப்பட்டு அவர் சொன்ன பதில்கள் சொன்னவாறே பதிவு செய்யப்பட்டது. மேற்படி இளவர்/ குழந்தை சாட்சி இந்த நீதிமன்றத்தின் கேள்விகளை நன்கு புரிந்து கொண்டு பதில்கள் அளித்ததால் அவர் நல்ல புரிந்து கொள்ளும் திறனில் உள்ளார் என்றும், அவர் சாட்சியமளிக்க தகுதியான மனநிலையில் உள்ளார் என்றும் திருப்தி அடைந்து அவரை நீதிமன்ற மொழிப்பெயர்ப்பாளர் மூலம் சத்தியபிரமாணம் செய்ய சொல்லி, அவ்வாறு சத்தியப் பிரமாணம் செய்வித்த பிறகு அவரது சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **10.04.2026.**

**PW - 7**

**(**எதிரி ஆஜர்**)**

<u>**முதல் விசாரணை**</u>

தற்போது கடலூரில், ஸ்ரீவரதாம்மாள் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் 11ம் வகுப்பு உயிரி கணிதவியல் படிக்கிறேன். கடலூரில் உள்ள மேட் மகளிர் விடுதியில் தங்கி படிக்கிறேன். ஆஜர் எதிரி எனது தாயார் ஆவார். சாட்சி அ.சா.6 ரேவதி எனது அக்கா ஆவார். எனக்கு தர்ஷினி என்ற தங்கையும் உள்ளார். என் அப்பா பொன்னன் நான் சிறு வயதாக இருக்கும்போதே இறந்துவிட்டார். எதிரியான என் அம்மா, என் அப்பா பொன்னன் இறந்த பிறகு பிரபு என்பவரை இரண்டாவது திருமணம் செய்து கொண்டார். பிரபு தான் இந்த வழக்கில் இறந்தவர். சம்பவம் நடந்த போது, என் அம்மா முசிறி, அய்யம்பாளையத்தில் உள்ள சண்முகம் என்பவரது செங்கல் சூளையில் வேலை செய்தார். பிரபுவும் அங்கு தான் வேலை செய்தார். நான் 2022–ம் வருடம் கடலூர் மாவட்டம், பண்ருட்டி அருகே உள்ள வேளங்காட்டில் உள்ள எனது அத்தை பொன்னியம்மாள் என்பவரது வீட்டில் நானும் எனது அக்கா ரேவதியும் தங்கி படித்தோம். சம்பவ காலத்தில் நான் முசிறி அய்யம்பாளையத்தில் உள்ள என் அம்மா வேலை செய்யும் செங்கல் சூளைக்கு வரவில்லை. பிரபு எப்படி இறந்தார் என்று தெரியாது. சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. அதன் பிறகு முசிறி நீதிமன்றத்தில் வாக்குமூலம் கொடுத்தேனா என்றால் தெரியவில்லை. மீண்டும் போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

*(சாட்சியை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி, குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.)*

<u>**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

போலீசார் விசாரித்த போது, கடந்த 2022-ம் வருடம் நானும் எனது அக்கா ரேவதி, அத்தை பொன்னியம்மாள் வீட்டில் தங்கி படித்தோம் என்றும், பள்ளிக்கு

விடுமுறை விட்டதால், நாங்கள் இருவரும் கடந்த 27.08.2022 அன்று என் அம்மா வேலை செய்த ஏ.பி.எஸ்.செங்கல் சூளைக்கு வந்து தங்கினோம் என்றும், நாங்கள் இரவு செங்கல் சூளையில் உள்ள கொட்டகையில் தூங்கியபோது எனது அம்மா இயற்கை உபாதைக்கு வெளியே சென்ற போது, நானும் எனது சகோதரி ரேவதியும், தூங்கிக்கொண்டிருந்தோம் என்றும், அப்போது குடிபோதையில் வந்த எனது அம்மாவின் இரண்டாவது கணவர் பிரபு என் அக்காவை பலாத்காரம் செய்ய முயற்சித்தார் என்றும், அவர் சத்தம் போட்டதால் என் அம்மா வந்து, பிரபுவை அரிவாளால் வெட்டினார் என்றும் பின்பு, வாதாமடைக்கை கட்டையால் பிரபுவின் தலையில் அடித்தார் என்றும், அடிப்பட்ட பிரபு சிறிது நேரத்தில் இறந்துவிட்டார் என்றும், பின்பு எனது அம்மா பிரபுவின் காலை தர தரவென இழுத்து சென்று கொட்டகைக்கு பின்புறம் உள்ள காவிரி ஆற்றில் தள்ளிவிட்டார் என்றும், சிறிது நேரத்தில் சூளையில் வேலை செய்யும் ராஜு, வந்து பிரபுவை கேட்டார் என்றும், அவரிடம் எனது அம்மா ரூ.100/- ஐ கொடுத்து அனுப்பினார் என்றும், பின்பு எங்களை எங்கள் அம்மா அழைத்துச் சென்று ஐயம்பாளையம் பஸ் ஸ்டாப்பில் பஸ் ஏற்றி எங்களை சமயபுரம் டோல்கேட்டில் நிற்க சொன்னார் என்றும், சூளை ஓனர் போன் செய்தால் அவரிடம் எனது அப்பா பிரபு சண்டை போட்டு எங்களை கொண்டு வந்து சமயபுரம் டோல்கேட்டில் விட்டு விட்டதாக சொல்ல சொன்னார் என்றும், இதை நான் போன் செய்த சூளை ஓனரிடம் சொன்னேன் என்றும், பின்பு ஓனர் வண்டியை அனுப்பி அதில் ராஜுவும் எனது அம்மாவும் வந்து எங்களை அழைத்துச் சென்றார்கள் என்றும், பின்பு இரண்டு நாட்கள் கழித்து, வேளங்காட்டிற்கு சென்றுவிட்டனர் என்றும், 03.01.2023 அன்று பிரபுவின் தந்தை ஆறுமுகம் வந்து, பிரபுவை பற்றி விசாரித்த போது, எனது அம்மா நடந்ததை சொன்னார் என்றும், பின்பு ஆறுமுகம் அந்த தகவலை போலீசாரிடம் சொன்னார் என்றும், இது குறித்து கடந்த 12.01.2023 அன்று முசிறி நீதிமன்றத்தில் இருந்து வந்த சம்மனை பெற்று நீதிமன்றம் சென்று நீதிபதி முன்பு மேற்படி சம்பவத்தை

வாக்குமூலமாக சொன்னேன் என்றும், எதிரி எனது தாயார் என்பதால் தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் இந்த சாட்சியிடம் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.